**<u>சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்</u>**

**முன்னிலை: திருமதி. த. மாலதி, பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, ஓமலூர்.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் நாள் திங்கட்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 16ம் நாள்)

**<u>இந்து திருமண அசல் மனு எண்: 44/2022</u>**
**<u>CNR No.TNSA19-000084-2025</u>**

V.ஜீவா ...மனுதாரர்

/எதிராக/

புஷ்பராஜ் ...எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக என் முன்பாக கொண்டுவரப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் Thiru.B.Kalaiselvan அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் Thiru.M.Ramamoorthy அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு மனு சங்கதிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்து இந்நீதிமன்றம் இன்று வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 16.06.2005ம் தேதியன்று அயோத்தியாப்பட்டணம் ராமர் கோயிலில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, விவாகரத்து பரிகாரம் வழங்க இந்து திருமணச் சட்டம் 1955 பிரிவு 13(1) (ia)-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்.-**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 16.06.2005ம் தேதியன்று அயோத்தியாப்பட்டணம் ராமர் கோயிலில் திருமணம் நடைபெற்றிருக்கிறது. மேற்படி திருமணம் பதிவு செய்யப்பட்ட காதல் திருமணம் ஆகும். திருமணத்திற்குப் பின்னர்,

மனுதாரரும் எதிர்மனுதாரரும் ஆரம்பத்தில் ஆறு மாதங்கள் எதிர்மனுதாரரின் பெரியப்பா மகன் குமரேசன் என்பவரின் வீட்டில் குடித்தனம் நடத்தி வந்திருக்கிறார்கள். திருமணம் நடைபெற்றதிலிருந்து எதிர்மனுதாரர் மனுதாரரை அடிக்கடி சந்தேகித்து, சண்டையிட்டு, அடித்து, கேவலமான வார்த்தைகளால் திட்டி, மனுதாரரை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் கொடுமைப்படுத்தி வந்திருக்கிறார். காதல் திருமணம் காரணமாக பெற்றோருடன் தொடர்பு இல்லாத நிலையை எதிர்மனுதாரர் பயன்படுத்தி மனுதாரரை தொடர்ந்து துன்புறுத்தியிருக்கிறார்.

அதன் பின்னர் சுமார் ஆறு மாதங்கள் கழித்து சேலத்தாம்பட்டி, முனியப்பன் கோவில் எதிரில் உள்ள ஒரு வாடகை வீட்டில் குடியேறி வசித்து வந்திருக்கிறார்கள். அங்கு வசித்தபோது, அக்கம் பக்கத்தினருடன் பேசினால்கூட சந்தேகித்து, மிகக் கேவலமான வார்த்தைகளால் திட்டி, எதிர்மனுதாரர் மனுதாரரை அடித்து சித்ரவதை செய்து வந்திருக்கிறார். 2006 ஆம் ஆண்டில் மனுதாரர் ஏழு மாத கர்ப்பிணியாக இருந்தபோது சிவதாபுரம் காட்டூர் பகுதியில் இருவரும் குடியிருந்து வந்திருக்கிறார்கள். அங்கும் கர்ப்பிணி பெண் என்பதைப் பொருட்படுத்தாமல் எதிர்மனுதாரர் மனுதாரரை அடித்து கொடுமைப்படுத்தியிருக்கிறார். மேலும், 13.04.2006ம் தேதியன்று மனுதாரருக்கு முதல் பெண் குழந்தை ரித்திஷா பிறந்திருக்கிறது. அப்போது மனுதாரரின் மாமியார் காலை முதல் மாலை வரை மனுதாரருடன் இருந்து, மனுதாரரைப் பற்றி எதிர்மனுதாரரிடம் தவறாக கூறி எதிர்மனுதாரரைத் தூண்டி அடிக்கச் செய்திருக்கிறார். இதனால் எதிர்மனுதாரர் மனுதாரரை அடிப்பதையும், கேவலமாக திட்டுவதையும் வழக்கமாக கொண்டிருந்திருக்கிறார்.

மேலும், 2007 ஆம் ஆண்டு சிவதாபுரம் கோவில் அருகிலுள்ள வீட்டில் எதிர்மனுதாரர் தனது குடும்பத்தாருடன் குடியேறியிருக்கிறார். அங்கு எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தினரும் மனுதாரரை கடுமையாக கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். இதனால் 2008 ஆம் ஆண்டு கந்தம்பட்டியில் உறவினர்களின் உதவியுடன்

தனிக்குடித்தனம் வைத்தபோதும், எதிர்மனுதாரரின் சந்தேகம் மற்றும் வன்முறை குணம் தொடர்ந்து நீடித்திருக்கிறது. மனுதாரர் பூ வைத்தாலோ, பண்டிகை நாட்களில் தலைக்குக் குளித்தாலோ, நல்ல உடை அணிந்தாலோ கூட அவதூறு கூறி, இரவு முழுவதும் முடியை பிடித்து இழுத்து அடித்து உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் கொடுமை செய்து வந்திருக்கிறார். இதனால் மனுதாரர் பலமுறை காயம்பட்டிருக்கிறார். மேலும், அவமானத்தையும் அனுபவித்து வந்திருக்கிறார்.

இந்த சூழ்நிலையில் மனுதாரர் கடுமையான மனஉளைச்சலுக்கு ஆளாகி, தனது பெற்றோருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கேட்டபோது. மூன்று ஆண்டுகளாக தொடர்பில் இல்லாத பெற்றோர் அதிர்ச்சி அடைந்து, 2008 ஆம் ஆண்டு மனுதாரரை நெத்திமேட்டில் உள்ள மனுதாரரின் பெரியம்மா வீட்டிற்கு பாதுகாப்பாக அழைத்துச் சென்றுவிட்டிருக்கிறார்கள். பின்னர் எதிர்மனுதாரர் தன்னை திருத்திக் கொள்வதாக கூறி, தாய், அக்கா மற்றும் தங்கையுடன் வந்து மனுதாரரை மீண்டும் அழைத்துச் சென்றிருக்கிறார். ஆனால் சில நாட்களிலேயே பழையபடி மீண்டும் கொடுமை செய்து வந்திருக்கிறார். இதனால் மனுதாரர் தற்கொலை செய்யும் நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறார். இதனை அறிந்த பெற்றோர் மனுதாரரை மீண்டும் அழைத்து சென்று கல்வியை தொடரச் செய்து, மனுதாரர் 2009 ஆம் ஆண்டு M.Sc மற்றும் 2010 ஆம் ஆண்டு B.Ed படிப்புகளை படிக்க வைத்திருக்கின்றனர். அப்பொழுது மனுதாரர் தனது பெற்றோருடன் முல்லைநகர் பகுதியில் வசித்து வந்திருக்கிறார்.

மேலும், 2011 ஆம் ஆண்டு மனுதாரர் வித்யா மந்திரி பள்ளியில் வேதியியல் ஆசிரியராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்திருக்கிறார். 2012 ஆம் ஆண்டு மனுதாரரின் குடும்பத்தினர் முல்லைநகர் 4வது கிராஸ் தெருவிற்கு குடிபெயர்ந்திருக்கிறார். அப்போது மனுதாரர் வேலைக்கு செல்லும் போது எதிர்மனுதாரர் அவரை பின்தொடர்ந்து கண்காணித்து, பள்ளி அருகில் நின்றுகொண்டு அவதூறு கூறியும் மற்றும் மாலை வீட்டிற்கு வரும்போது அக்கம்பக்கத்தினர் முன்னிலையில்

கேவலமாக திட்டி அடித்து கொடுமைப்படுத்தியிருக்கிறார். மேலும், மனுதாரரின் சம்பளத்தையும் பிடுங்கி கொண்டிருக்கிறார். ஒரு நாள் பணம் தராத காரணத்தால் மனுதாரரின் சம்பளத்தையும் ATM கார்டையும் பறித்துக்கொண்டிருக்கிறார். மேலும், ஆண்டிபட்டி பகுதியில் வசிக்கும் நதியா என்ற பெண்ணுடன் கள்ளத் தொடர்பு வைத்துக்கொண்டு மனுதாரரின் வருமானத்தை அவளுக்கு செலவு செய்து வந்திருக்கிறார். பின்னர் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு 2017 ஆம் ஆண்டு மீண்டும் இணைந்து வாழத் தொடங்கினாலும், எதிர்மனுதாரரின் நடத்தை மாற்றமின்றி தொடர்ந்திருக்கிறது. குடும்பச் செலவுகளை அனைத்தையும் மனுதாரரே செய்து வந்திருக்கிறார்.

மேலும், 06.10.2021 அன்று சமிக்ஷா என்ற இரண்டாவது பெண் குழந்தை பிறந்திருக்கிறது. கர்ப்ப காலத்தில் ஏற்பட்ட மன உளைச்சலால் குழந்தைக்கு உடல் மற்றும் வளர்ச்சி குறைபாடுகள் ஏற்பட்டிருக்கிறது. இதற்கான அனைத்து செலவுகளையும் மனுதாரரே செய்து வந்திருக்கிறார். ஆனால் எதிர்மனுதாரர் நகை மற்றும் பணத்தைப் பெற்றுக்கொண்டு எந்தச் செலவையும் செய்யவில்லை. மேலும் பல பெண்களுடன் ஒழுங்கற்ற உறவு வைத்துகொண்டு வீட்டிற்கு அழைத்து வந்ததால் வீட்டு உரிமையாளர் வீட்டை காலி செய்யும்படி கூறியிருக்கிறார். 2020 ஆம் ஆண்டு கந்தம்பட்டி பகுதியில் குடியேறிய பின்னரும் எதிர்மனுதாரர் அதேபோன்ற சந்தேகம், வன்முறை மற்றும் அவதூறு செயல்களை தொடர்ந்து செய்து வந்திருக்கிறார். பொதுமக்கள் முன்னிலையிலும் மனுதாரரை அடித்து அவமதியிருக்கிறார், முதல் பெண் குழந்தை தந்தையிடம் அம்மாவை அடிக்கவேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்தபோதும், அவளையும் திட்டி தாக்கியிருக்கிறார்.

மேலும், 08.04.2021 அன்று எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரிகள் மனுதாரரையும் குழந்தைகளையும் தாக்கியிருக்கிறார்கள். இதனால் மனுதாரர் சூரமங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளித்திருக்கிறார், இதனால் எதிர்மனுதாரர்

மீண்டும் வந்து மிரட்டல் விடுத்தும் அவதூறு செய்தும் இருந்திருக்கிறார். மேலும், பலமுறை சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் எதிர்மனுதாரர் திருந்தவில்லை. 21.06.2021 அன்று வந்து பணம் கேட்டும், கொடுக்கவில்லையென்றால் குடும்பத்தினரை கொலை செய்வதாக மிரட்டியிருக்கிறார். 25.09.2021 மற்றும் 28.09.2021 தேதிகளில் எதிர்மனுதாரர் மனுதாரரை வழிமறித்து பணம் கோரி மிரட்டியதுடன், கத்தியைக் காட்டி உயிருக்கு ஆபத்து விளைவிப்பதாக மிரட்டியிருக்கிறார். அப்பொழுது அங்கு இருந்தவர்கள் உதவி செய்து மனுதாரரை காப்பாற்றியிருக்கின்றனர்.

மேலும், முன்பு அளித்த புகாரை திரும்பப் பெறச்செய்ய எதிர்மனுதாரர் தற்கொலை முயற்சி செய்வது போல நடித்து மனுதாரரை வற்புறுத்தியிருக்கிறார். அதுமட்டுமின்றி, எதிர்மனுதாரரும் அவரது சகோதரிகளும் மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு அத்துமீறி நுழைந்து வீட்டில் உள்ள பொருட்களை சேதப்படுத்தி மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினரை கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கின்றனர். திருமணத்திலிருந்து இதுவரை குடும்பச் செலவுகளை முழுமையாக மனுதாரரே செய்து குடும்பத்தை நடத்தி வந்துள்ளார். எனவே, மேற்கண்ட அனைத்து காரணங்களாலும் எதிர்மனுதாரரின் செயல்கள் மனுதாரருக்கு உடல் மற்றும் மன ரீதியாக கடுமையான கொடுமைகளை ஏற்படுத்தியுள்ளன. பலமுறை வாய்ப்பு அளித்தும் எதிர்மனுதாரர் திருந்தாததால், மனுதாரரும் குழந்தைகளும் பாதுகாப்பாக வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால், மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்து கோரி இம்மனு தாக்கல் செய்திருக்கிறார்.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவின் சுருக்க</u>ம்.—

மேற்படி மனுவில் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்ளும் ஒரு சில சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளும் பொய்யானதும், உண்மைக்கு புறம்பானதாகும். சட்டப்படிக்கும் நியாயபடிக்கும் செல்லாததாகும். இந்த மனுவானது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை

தவிர மற்ற சங்கதிகள் அனைத்தைம் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் மனுவில் குறிப்பிட்டு கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானவை, மனுதாரர் நாயுடு கவரா (BC) சமூகத்தைச் சார்ந்தவர்; எதிர்மனுதாரர் ஆதிதிராவிடர் (SC) சமூகத்தைச் சார்ந்தவர் என்பதனால் மனுதாரரின் பெற்றோர் இந்த திருமணத்தை ஏற்கவில்லை. இருந்தபோதிலும், மனுதாரரும் எதிர்மனுதாரரும் ஆரம்பத்தில் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர்.

திருமணத்திற்கு பின்னர் 10 நாட்கள் ஆண்டிப்பட்டியில் உள்ள பெரியப்பா வீட்டில் குடியிருந்து, அதன் பின்னர் அனைத்து வசதிகளும் உள்ள சேலத்தாம்பட்டியில் குடியேறினர். பின்னர், கூட்டுக் குடும்பமாக வாழ இருவரும் முடிவு செய்து சிவதாபுரத்தில் ஒரு வாடகை வீட்டில் குடியேறி கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தனர். அதன் பின்னர் மனுதாரர் சாதியின் பெயரைச் சொல்லி எதிர்மனுதாரரின் குடும்பத்தினரை கேவலமாக பேசி அவமதித்திருக்கிறார். தொடர்ந்து கந்தம்பட்டியில் உள்ள ஹவுசிங் போர்டு பகுதியில் ஒரு வீட்டில் வாடகைக்கு குடியேறினர். அப்போது எதிர்மனுதாரரின் தாய் மற்றும் சகோதரிகள் குழந்தையை பார்க்க வீட்டிற்கு வந்தபோது, மனுதாரர் அவர்களை சாதி பெயரைச் சொல்லி அவதூறாக பேசி, இனிமேல் யாரும் வீட்டிற்கு வரக்கூடாது என்று கூறியதால், எதிர்மனுதாரரின் உறவினர்கள் வீட்டிற்கு வருவதை நிறுத்தி கொண்டனர்.

பின்னர், மனுதாரர் எதிர்மனுதாரரிடம் தெரிவிக்காமல், அவர் வேலைக்கு சென்றிருந்த நேரத்தில் தனது பெரியப்பா வீட்டிற்கு சென்றுவிட்டார். அதன் பின்னர் ஊர் பெரியவர்களின் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தி மனுதாரரை வீட்டிற்கு அழைத்தபோது, எதிர்மனுதாரர் சந்தேகப்படுகிறார் என்று மனுதாரர் கூறியுள்ளார். பின்னர் மனுதாரரின் பெற்றோர் தொலைபேசியில் அழைத்ததன் காரணமாக, சூரமங்கலம் முல்லைநகர் பகுதியில் மனுதாரர், எதிர்மனுதாரர் மற்றும் குழந்தையுடன் குடியேறினர். பின்னர், மனுதாரர் மேல்படிப்பு படிக்க விரும்பியதால், M.Sc., B.Ed. வரை எதிர்மனுதாரர் செலவுகளை செய்து மனுதாரரை உயர் கல்வி கற்கச் செய்தார். படிப்பு

முடிந்த பின், திரு. செம்மலை, M.P. அவர்களின் பரிந்துரையின் மூலம் வித்யா மந்திர் பள்ளியில் மனுதாரரை ஆசிரியராக பணியில் சேர்த்துவிட்டார். அதன் பின்னர், மனுதாரர் தனது பெற்றோரின் தூண்டுதல்களை ஏற்று அடிக்கடி பெற்றோர் வீட்டிற்கு செல்வதை வழக்கமாகக் கொண்டார்.

மேலும், மனுதாரர் தனது சம்பளத்தை தனக்கே வைத்துக் கொண்டார். எதிர்மனுதாரர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதனால், மனுதாரர் தனது பெற்றோர் வீட்டிற்கு அவரை அழைத்துச் செல்லவில்லை. மேலும், மனுதாரரின் வீட்டில் நடைபெறும் எந்த விசேஷ நிகழ்ச்சிகளுக்கும் ஜாதியை காரணம் காட்டி எதிர்மனுதாரரை அழைக்கவில்லை. இதனால் எதிர்மனுதாரர் மன உளைச்சலுடனும், மன வேதனையுடனும் வாழ்ந்து வந்தார். மேலும், மனுதாரர் எப்போதும் எதிர்மனுதாரரின் பேச்சைக் கேட்காமல் இருந்து வந்தார். பின்னர், 06.10.2017ம் தேதி சமிக்ஷா என்ற பெண் குழந்தை உடல் குறைபாட்டுடன் பிறந்தது. அந்த குழந்தையை இருவரும் கவனித்து வந்தனர். இருப்பினும், மனுதாரர் தனது பெற்றோரின் தூண்டுதலால் எதிர்மனுதாரருடன் அடிக்கடி சண்டை செய்து, ஒரு இந்து மனைவியாக நடந்து கொள்ளாமல், அவரை மதிக்காமல் கேவலமாக பேசி அவமதித்து வந்தார். மனுதாரர் வேலைக்கு சென்றபோது, எதிர்மனுதாரரின் சகோதரிகள் வீட்டிற்கு வந்து வீட்டு வேலைகளை செய்து சென்றனர். ஆனால், மனுதாரர் வீட்டிற்கு வந்ததும் யார் வீட்டிற்கு வந்தார்கள் என்று எதிர்மனுதாரரை சந்தேகித்து, காரணமின்றி சண்டை செய்து மன உளைச்சலை ஏற்படுத்தி வந்தார்.

மேலும், குழந்தைகளின் எதிர்கால நலனை கருதி எதிர்மனுதாரர் மனுதாரரின் அனைத்து கொடுமைகளையும் பொறுத்து வாழ்ந்து வந்தார். இதுவரை எதிர்மனுதாரர் மனுதாரரின் வீட்டில் எந்தவித உதவியும் எதிர்பார்க்கவில்லை; ஒரு வேளை உணவும் அங்கு உட்கொண்டதில்லை. இருந்தபோதிலும், எதிர்மனுதாரரின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் காவல் நிலையத்தில் பொய்யான புகார் கொடுத்தார். இதனால்

எதிர்மனுதாரர் தற்கொலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டார். பின்னர், கந்தம்பட்டியில் எட்டிமரத்து வட்டம், மேம்பால நகர் பகுதியில் இஸ்மாயில் என்பவரின் வீட்டை ரூ.4 லட்சத்திற்கு போக்கியாக பேசி குடியேறினர். பின்னர் ஏற்பட்ட பிரச்சினையை பயன்படுத்தி மனுதாரர் தனது பெற்றோரிடம் தவறாக கூறியதால், மனுதாரரும் எதிர்மனுதாரரும் பிரிந்து வாழும் நிலை ஏற்பட்டது. மேலும், வீட்டு உரிமையாளர் இஸ்மாயில் ரூ.4 லட்சத்தை மோசடி செய்ததால், அவருக்கு எதிராக எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். பின்னர், எதிர்மனுதாரர் மனுதாரருடன் மீண்டும் சேர்ந்து வாழ விரும்பி, தனது உறவினர் வீரகுமார் மூலம் மனுதாரரிடம் பேச்சுவார்த்தை நடத்த முயன்றார். இருந்தபோதிலும், மனுதாரர் குழந்தைகளை பார்க்ககூட எதிர்மனுதாரருக்கு அனுமதி அளிக்கவில்லை. பின்னர், குழந்தைக்கு சிகிச்சை அளிக்க வேண்டி மனுதாரரை சந்திக்கச் சென்றபோது, மனுதாரர் பொதுமக்கள் முன்னிலையில் சண்டை செய்து, அவருடன் பணிபுரிபவர்களை வைத்து எதிர்மனுதாரரை தாக்கியிருக்கிறார்.

மேலும், 29.06.2023 அன்று மனுதாரர் ஒரு சந்தோஷ்குமார் என்பவருடன் ஏற்காடு அடிவாரம் குரும்பப்பட்டி பகுதிக்கு சென்றதை அறிந்த எதிர்மனுதாரர் கண்டித்து கேட்டபோது, மனுதாரர் கன்னங்குறிச்சி காவல் நிலையத்தில் பொய்யான புகார் அளித்தார். இருந்தபோதிலும், எதிர்மனுதாரர் தனது குடும்ப நலனை கருதி மனுதாரரையும் இரு பெண் குழந்தைகளையும் பாதுகாத்து, அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்கி குடும்பமாக சேர்ந்து வாழ இன்றளவும் தயாராக உள்ளார். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் எதிர்மனுதாரர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை முற்றிலுமாக மறுத்துரைத்து மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிர் உரை தாக்கல் செய்திருக்கிறார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவெனில்:–**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையேயான திருமண பந்தம் ரத்து செய்யத்தக்கதா? என்பதேயாகும்.

5. மனுதாரர் தரப்பில் மனுதாரர் திருமதி.ஜீவா ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 திருமண சான்றிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், திருமண புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை ம.சா.ஆ.3 ஆகவும், ரித்திஷாவின் பிறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.4, ஆகவும், ரித்திஷாவின் ஆதார் அட்டை ம.சா.ஆ.5 ஆகவும், சமிஷாவின் பிறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.6 ஆகவும், சமிஷாவின் ஆதார் அட்டை ம.சா.ஆ.7 ஆகவும், எதிர்மனுதாரர் மீது AWPS சூரமங்கலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.8 ஆகவும், சூரமங்கலம் காவல் நிலையத்தில் மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட சி.எஸ்.ஆர் ம.சா.ஆ.9 ஆகவும், எதிர்மனுதாரர் மீது கன்னங்குறிச்சி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.10 ஆகவும், சூரமங்கலம் காவல் நிலையத்தில் மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட சி.எஸ்.ஆர் ம.சா.ஆ.11 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் பழனிசாமி எ.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் ஆதார் அட்டை எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>பிரச்சனைக்கான தீர்வு</u>

6. மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளையே தான் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் கூறியுள்ளார். ம.சா.1 குறுக்கு விசாரணையில், "குடும்பநலன் கருதி மனுதாரர் என்னோடு வாழ விரும்புகிறார் என்றால் எனக்கு விருப்பம் இல்லை என்றும், எதிர்மனுதாரர் மீது கூறியுள்ள குற்றச்சாட்டுகளை தவிர்த்து விவாகரத்து கொடுக்க எதிர்மனுதாரர் சம்மதிக்கிறார் என்றால் என்னை கொடுமைபடுத்தியது உண்மை தான், விவாகரத்து பெற்றுக்கொள்ளதான் வழக்கே தாக்கல் செய்திருக்கிறேன் என்றும், மேற்கொண்டு எதிர்மனுதாரரிடம் எந்தகோரிக்கையும் வைக்கபோவதில்லை என்றால் விவாகரத்து கொடுத்தால் நான் எந்த கோரிக்கையும் வைக்கப்போவதில்லை என்றும், அவரிடமிருந்து எனக்கு எந்த உரிமையும் வேண்டாம் என்றும், அவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறேன் என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார். எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கடந்த

18.09.2025ம் தேதியன்று எதிர்மனுதாரர் தரப்பில் ஒரு குறிப்பாணை தாக்கல் செய்து அதில் மனுதாரர் தன் விருப்பத்திற்கு விரும்பி இம்மனு தாக்கல் செய்துள்ளதால், எதிர்மனுதாரிடமிருந்து மனுதாரர் எந்தவிதமான கோரிக்கையோ, உரிமையோ மற்றும் ஜீவனாம்சமோ கேட்காதபட்சத்தில், எதிர்மனுதாரர் மனுதாரரின் பரிகாரத்தை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறார் என்று குறிப்பிட்டு கூறியிருக்கிறார் என்பது தெரியவருகிறது.

**7.** இருதரப்பும் கேட்கப்பட்டு இம்மனுவின் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் முன்னிலைப்படுத்தியுள்ள வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலிக்கையில், மனுதாரர் எதிர்மனுதாரரின் சட்டப்படியான மனைவி என்பதிலும் மனுதாரருக்கும், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 16.06.2005ம் தேதியன்று அயோத்தியாப்பட்டணம் ராமர் கோயிலில் திருமணம் நடைபெற்றது என்பதும், திருமணத்திற்கு பின்னிட்டு, மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக பல்வேறு இடங்களில் குடியேறி குடும்பம் நடத்தி வந்துள்ளார்கள் என்பதும் இல்வாழ்க்கையின் பயனாக இரு குழந்தைகள் பிறந்திருக்கின்றனர் என்பதும் இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

மேலும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் எதிர்காலத்தில் சேர்ந்து வாழக்கூடிய வாய்ப்பில்லை என்றும், இருதரப்பினரும் விவாகரத்துக் பெற்றுக் கொள்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாலும், மனுதாரர் தனக்கு ஏற்பட்ட கொடுமைகளின் காரணமாக இனிமேற்கொண்டு சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்று கூறியதாலும் மேலும் இருவரும் பிரிந்து விடுவதாக ஒப்புக்கொண்டு மனுதாரரும், எதிர்மனுதாரரும் சாட்சியம் அளித்திருப்பதாலும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் எதிர்கால வாழ்க்கை நலனை கருத்தில் கொண்டும் மனுதாரர், எதிர்மனுதாரர் கோரியவாறு விவாகரத்து வழங்கி உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக,

இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 16.06.2005ம் தேதியன்று அயோத்தியாப்பட்டணம் ராமர் கோயிலில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து, விவாகரத்து வழங்க இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்/−த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்.</u>−

மசா.1 − ஜீவா (மனுதாரர்)

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.</u>−

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ம.த.சா.ஆ.1 | − | 16.06.2005 | திருமண சான்றிதழ் − அசல் |
| 2. | ம.த.சா.ஆ.2 | − | − | திருமண புகைப்படம் − அசல் |
| 3. | ம.த.சா.ஆ.3 | − | − | மனுதாரரின் ஆதார் அட்டை − நகல் |
| 4. | ம.த.சா.ஆ.4 | − | − | ரித்திஷா பிறப்பு சான்றிதழ் − நகல் |
| 5. | ம.த.சா.ஆ.5 | − | 13.04.2006 | ரித்திஷா ஆதார் அட்டை − நகல் |
| 6. | ம.த.சா.ஆ.6 | − | − | சமிஷா பிறப்பு சான்றிதழ் − நகல் |
| 7. | ம.த.சா.ஆ.7 | − | − | சமிஷா ஆதார் அட்டை − நகல் |
| 8. | ம.த.சா.ஆ.8 | − | 14.10.2021 | எதிர்மனுதாரர் மீது AWPS சூரமங்கலத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை FIR No. 45/2021 − நகல் |
| 9. | ம.த.சா.ஆ.9 | − | 11.04.2021 | சூரமங்கலம் காவல் நிலையத்தில் மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செய்யப்பட்ட CSR 464/2021 – நகல் |
| 10. | ம.த.சா.ஆ.10 | – | 01.07.2023 | எதிர்மனுதாரர் மீது கண்ணங்குறிச்சி காவல் நியைலத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை FIR No.723/2023 – நகல் |
| 11. | ம.த.சா.ஆ.11 | – | 11.12.2024 | சூரமங்கலம் காவல் நிலையத்தில் மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட CSR.964/2024 – நகல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> – இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>– இல்லை

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.